

அவளாகிய நான்...!!!

இடது கை விஷம் தடவிய கத்தியையும், வலது கை பூச்சிக்கொல்லி மருந்தையும் தாங்கிகொண்டிருந்த வேளையிலே, இடதுகாலில் கழுத்திற்கு ஆசைப்பட்டுக் கொண்டிருக்கும் கயிற்றுக்கிடையில், வலதுகால் 7 அடி மாடி உச்சியின் விளிம்பிலிருந்து நேரடியாகப் பூமித்தாயை முத்தமிட காத்திருந்தது.

அப்பொழுது அந்த இரண்டு கை மற்றும் இரண்டு கால்களைப் பார்த்துக் கேட்டேன்...

வலி இல்லாமல் சாவது எப்படி...??? என்று,

உடனே என் வலக்கால் இடக்காலை பார்த்து, மேலே தூக்கு என்று மிரட்டியது, பின் ஒரு கணமும் யோசிக்காமல் மாடி விளிம்பிலிருந்து இடக்கால் ஓரடி முன்னேறியது. 5 வினாடிகள் ஆயின. என் உடல் முழுவதும் அந்தரத்திலே பறந்து, விழிகள் மட்டும் ஐந்தாவது மாடியைப் பார்த்துக் கொண்டே கீழிறங்கியது.

ஏனோ தெரியவில்லை, ஏழாவது வினாடியில் எனது வலது கால் பூமியை முத்தமிட வெறுப்புக் கொண்டது.

ஆம்...! இரண்டாவது மாடியில் அறுந்து தொங்கிய, துணி காயப்போடும் கம்பியில் என் கால் மாட்டிக்கொண்டு தலைகீழாக வெளவாலை போல் தொங்கினேன். என் தலைக்கும், தரைக்கும் சுமார் 45 அடி தூரம் இருந்திருக்கும். கத்தினேன், கதறினேன்...

"சித்திரகுப்தா அந்தப் பாசக் கயிற்றை இவன் மேலே வீசு" என்று எமன் பேசிய பாஷைகளெல்லாம் என் காதில் கேட்டன. என் வலது காலை பார்த்து இதயம் சொன்னது,

"டேய் உன்னோட ஆச நிறைவேறாதுடா"

உனக்குப் பதிலா இவனோட பெருமூளை, சிறுமூளை, முகுளம் இவைகளெல்லாம் கபாலத்த திறந்துகிட்டு தரைய முதல்ல தொட போகுதுங்க, நீ என்னடா பண்ணப்போறேன்னு சொல்லி எள்ளி நகையாடிச்சி.

ஏழு வினாடிக்கு முன் ஏழாவது மாடியில் நின்றபோது, என்னுள் இருந்த தைரியம், தான் சாகவேண்டும் என்ற மனஉறுதி எல்லாம் எங்குப் போயின என்று எனக்குத் தெரியவில்லை. என்காலை தாங்கிக் கொண்டிருந்த கம்பியும் என்னைக் கைவிட நினைத்தது.

என் பத்து விரல்களும் மரணப் பயத்தில் தாளம்போட, தண்ணீரே இல்லாமல் என் உடல் குளிக்க, இதயத்தின் துடிப்பு நொடிக்கு 72க்கு மாறாக 112 ஆக, மூளையின் இரத்த நாளத்தில் ஓடும் குருதியின் சத்தம் என் மண்டையைப் பிளக்க, காலில் மாட்டிக்கொண்டிருந்த கம்பியும் அறுந்தது.

அப்பொழுது ஏதோ ஒரு பெயரை என் நாக்கு சத்தம் போட்டுச் சொன்னது. அந்த வார்த்தை,

"அம்மா" இல்லை.

"அப்பா" இல்லை.

"ஐயோ" இல்லை.

பின்ன என்னதான்னு கேக்குறீங்களா...???

அது வெண்தேவதையோட பேருங்க...

புரிஞ்சிருக்கும்னு நெனைக்கிறேன்...

ஆமாங்க...

நானும் காதலிச்சேன், காதலிக்கிறேன், காதலிப்பேன்...

அவள் பெயர உச்சரித்த காரணமோ என்னவோ... நான் எந்த விதமான பெரிய பாதிப்பும் இல்லாம சிறு சிறு காயங்கள மட்டுமே உடலுல வாங்கி உயிர் பிழைச்சேன்.

அப்படிப்பட்ட என் உயிரானவளோட பேரு - "அதிஷ்டா..."

இப்படி உயிர விடவே துணிஞ்சிட்டீங்களே...! அவள் என்ன, அவளோ பெரிய உலக அழகியானு கேக்குறீங்களா...???

ஆமாங்க...

"எனக்கு அவ உலக அழகிதான்..."

உங்களோட குழப்பத்த என்னால புரிஞ்சிக்க முடியுது.

நான் ஏன் தற்கொலைக்குத் தயாரானேன்...??? இதுதானே நீங்க என்ன கேட்க நினைக்கிற கேள்வி.

சொல்லுறேங்க...,

"யான் கவிதை எழுத அறியேன்
உன் காலடி சுவட்டை காணும் முன்னே...
கன்னியே...! உன் பிம்பம் என்கருவிழியில்
பதிந்த நாள் முதல் என் கண்கள் மறுக்கிறதே,
இமைகளை மூட...
என் தேகம் வெறுக்கிறதே, இரைகளை நாட...
உன் பல்லிடுக்கினில் என்னை நுழைத்தவளே,
என் வன்னிய நெஞ்சை வாட்டி வதைக்கும்
வலிய பேயும் ஆனவளே...
உன்னை ஈன்றோரை கண்டால்
ஈட்டியால் வதைப்பேன் கூறி விடு அவர்களிடம்.
உன் கரங்களில் வாளில்லை, நீ என்னை வெட்டவுமில்லை
இருந்தும் இறக்கிறேனே நொடிகளாக...!

ஏனடி...??? அடியே கூறடி...!

ஒற்றைப் புன்னகையாலே என் உயிரை குடித்ததேனோ...???
என் நான்கறை இதயத்தை நான்காயிரம் ஆக்கியதேனோ...???
தூங்கிய கண்விழிகள் என் மூளையைப் பழிப்பதேனோ...???
ஆடிய கை விரல்கள் எழுகோலை வெறுப்பதேனோ...???

என் அன்னையின் பாசத்தையே...,
என் அன்னையின் பாசத்தையே மறந்திட செய்ததேனோ...???

ஏனடி...??? அடியே கூறடி...!

இவ்வாறெல்லாம் உன்னை வருணிக்கும் எண்ணம்
எனக்கு இல்லையடி.
காரணம்,

இயன்ற வார்த்தைகளால் ஈடில்லா நீ,
மதிப்பிடப்பட்டு விடுவோயோ என்று.
எந்தன் உணர்வும் ஆனவளே...!
ஒன்றை மட்டும் உரைக்க என்னுளம் நாடுதடி...,
அடி கள்ளியே...!
பைத்தியமாக்கினாய் என்னை உன் நினைவுகளால்
மறந்தே போயிற்றடி "நான் யார்...???"
இந்நாழி தேடிப் பார்க்கிறேன் என்னையே உன்னுள்...

கண்டாயா...???

இருந்தால் உன் இதழ்களை இசை
காத்திருப்பேன் காலமெல்லாம்..."

காதல் கடிதம்தானே ராமானு கேட்குறீங்களா...???

காதல் என்ற வார்த்தைய கேட்டாலே வயித்துல நெருப்பு எரிய, முகத்துல கரிப்பிடிக்கிற அளவுக்குக் கடுப்பாவுற நானும் காதல் கடிதம் எழுதினேன், என் உயிரானவளுக்காக...! ஆனால், அந்தக் கடிதத்த, என் காதல சொல்லுறதுக்காகக் கொடுக்கல.

அவள்ட என் காதல சொல்லி அத அவள் ஏத்துக்க மறுத்தபோதும் நான் கொடுக்கல...

"இயேசுவை சிலுவையில் அறைந்ததுபோல் உங்களையும் உயிரோடு அறைந்து, உள்ளங்கால் முதல் உச்சி வரை ஓர் உளியை வைத்துக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொத்தி அந்தக் காயத்தில் உப்பையும், மிளகாய்த் தூளையும் போட்டால் எப்படியிருக்கும்...???

அதைவிடவும் கொடிய வலியை கொடுத்த அவளோட நினைவுகளைச் சுமந்துகொண்டு, அழுக்குச்சட்டை, கிறுக்குப்புத்தி, மயங்கிய கண்கள், மதியிழந்த உணர்வுகள்,

மனநலம் பாதித்தவனாய், மனம் முழுதும் அவளைத் தவிர வேறொன்றும் இல்லாதவனாய், வெறுமையில் வாழ்ந்து, சோத்த வெறுத்து, சுகத்த மறுத்து, சுற்றம் அறுந்து, குற்றம் மறந்து, சூனியம் வைக்கப்பட்டவனாய்...,

இப்போ சாகலாமா...???

ஒருவேளை, நாம செத்ததும் உன்ன காதலிக்கிறேன்னு சொல்லிட்டான்னா...???

சரி, ஒரு நாளு காத்திருப்போம்...

நாளைக்கு ஏதாவது சொல்லுவான்னு...,

நாய், காக்கைகளவிடக் கேவலமா திரிஞ்சி,

என் அம்மாவோட கனவ அழிச்சி,

எமனோட முகத்துல தினமும் முழிச்சி,

இப்பவே செத்துடலாம்...,

இல்ல சாக வேண்டாம்...,

செத்துடலாம்,

இல்ல சாக வேண்டாம்னு

ஒவ்வொரு நாளும், வாழவும் முடியாம சாகவும் முடியாம வழியத்து கிடந்த எனக்கு 2012 ஜூன் 12 ஆம் தேதி தாங்க சாகுறதுக்குத் தைரியம் வந்துது. நான் சாகணும்னு முடிவு எடுத்த 10 நிமிடத்துக்கு அப்புறம் என்னோட இந்த முதல் காதல் கவிதைய மின்னஞ்சலுல அவளுக்கு அனுப்பிவிட்டேன்.

ஆனால், என் முன் ஜென்ம பாவவினைகள் அன்றைக்கும் என்ன சாகடிக்கல. அதற்கு மாறா என்ன பெத்தவங்க, அவங்களோட உள்ளத்தால இறந்தாங்க.

"எனக்குச் சின்னக் கஷ்டம்னாலும் கண்ணீரால கடவுள் கால்கள கழுவுற, 281 நாட்கள் சுமந்து பெத்த என் அம்மாவோட கண்ணுலேருந்து ஒரு சொட்டு கண்ணீர் கூட வரல..."

"11 வயசுல நான் காது வலியில அழுதபோது, என்ன ஆஸ்பத்திரிக்கு அழைச்சிட்டு போனாரு என் அப்பா. அப்போ, எனக்குக் காது வலியா...? இல்ல, என் அப்பாவுக்குக் காது வலியானு தெரியாம கொழம்பி போனாரு டாக்டரு. அந்த அளவுக்கு என் மேல பாசம் வச்சிருந்த என் அப்பா, என்னோடு ஒரு வார்த்த கூடப் பேசல".

ஆனால், அந்தச் சூழ்நிலையிலும் என்னோட மனம்.., அம்மா, அப்பாவ பத்தி கவலப்படாம 'அதிஷ்டா' எப்படி இருக்காளோ...? தெரியலயேனு, ஊசலாடுச்சி.

"பிடித்ததெல்லாம் உடைந்து போக
ஓட்டை விழுந்த இதயம் மட்டும் ஓட வேண்டுமாம்
இயல் வாழ்க்கையில்"-னு

தவிச்சிக்கிட்டு இருந்த அச்சமயத்துல, அவளோட போனுலேருந்தொரு எஸ்.எம்.எஸ் வந்துது...

"ரண வேதனையா இருக்கும்னு எனக்குத் தெரியும். அந்தப் புண்ணுக்கு என்ன மருந்து போடுறதுனு எனக்குத் தெரியல, கல்யாணம். என்ன மன்னிசிடுனு"

என்னடா இவ்வளவு அக்கறையா பேசுறாளேனு பாக்குறீங்களா...!

உண்மைய சொல்லப்போனா நான் தற்கொலைக்கு முயற்சி பண்ணினது அவளுக்குத் தெரியவே தெரியாது.

பின்ன எப்படி அப்படியொரு எஸ்.எம்.எஸ்...???

அதுதாங்க என் தேவதையோட மனசு...

"என்ன லவ் பண்ணமுடியாதுனு அவ சொன்னபிறகு, நான் ரொம்பக் கஷ்டபடுவேன்னு தெரிஞ்சி, அந்த எஸ்.எம்.எஸ் எனக்கு அனுப்பியிருந்தா"

நீங்க என்னை கேட்கலாம்...,

இப்படிப்பட்ட மனசு உள்ளவ உங்கள காதலிச்சிருக்கலாமே ராமானு...?

என்ன மன்னிச்சிருங்க, அத சொல்ல நான் விரும்பல.

ஆனால் ஒன்னு மட்டும் சொல்லுறேன், இன்னைக்கு, இந்த உலகத்துல உனக்குப் பிடிக்காதவங்க யாரு அதிஷ்டானு...? அவள கேட்டீங்கனா, "கல்யாணராமன்"னு அவளோட உதடு உச்சரிக்கும்.

யாரையும் புண்படுத்தக் கூடாதுனு நெனைக்கிற அவள் அப்படிச் சொல்லுறதுக்குக் காரணம் அவள் இல்லீங்க, நான்தான். அதேபோல இந்தப் புத்தகத்த எழுதுறதுக்குக் காரணம் நான் இல்லீங்க, என்ன புத்தகம் எழுத சொன்ன அவள்தான்.

அப்படினா ராமா...! உங்களோட சொந்தக் கதை சோக கதைகள சொல்லத்தானா இந்தப் புத்தகம்னு கேட்குறீங்களா...?

"என்னோட கதைகள மட்டும் இல்லீங்க, 'இல்லாமை' என்ற வார்த்தையால 'இயலாமை' என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு 'கல்லாமை' என்பது பேச்சிலும், 'சொல்லாமை'

என்பது மூச்சிலும் இருக்க 'ஒவ்வாமை' என்ற வாழ்க்கைய வாழ்ந்துட்டு இருக்குற ஒவ்வொருத்தரோட இன்றைய வாழ்க்கை நிலையை அப்படியே எடுத்துச் சொல்லத்தான் இந்தப் புத்தகம்".

இப்படியெல்லாம் பொய் சொல்ல விரும்பலீங்க. ஏதோ, என்னால முடிஞ்ச வரைக்கும் கொஞ்சம் சொல்லுறதுக்கு ஆசப்படுறேன்...!!!

ஆமாம்...! எனக்கு என்ன தகுதி இருக்கு...? காதலிச்சேனா... அதுல தோத்து போனேனா... ரெண்டு சோக பாட்ட கேட்டுட்டு, தண்ணி அடிச்சு, தம்மு அடிச்சு, தேவதாஸ போலத் தாடி வச்சேனானு இல்லாம நானெல்லாம் புத்தகம் எழுத வந்துட்டா இந்த உலகம் என்னத்துக்கு ஆகுறது...???

உங்களப் போலவேதாங்க நானும் நெனைச்சேன்...

"ஆனா, சாராயத்த குடிக்காதடானு ஒரு நல்லவன் சொல்லுறதுக்கும்..."

"சாராயத்த குடிக்க ஆரம்பிச்சு, அதுக்கு அடிமையும் ஆகி, அதனால வீட்ட இழந்து, மனைவி மக்கள பறிகொடுத்து, மானம் போயி, மத்தவங்க இவன பாத்து எவன் எவனோ சாகுறான், இவன் செத்து தொலைய மாட்டேங்குறானு வசை பாடுறதெல்லாம் கேட்டு, பின்ன எப்படியாவது இந்தப் பாழாப் போன சாராயத்த விட்டடும்னு முட்டிமோதி, உடல வருத்தி, மனச இறுக்கி கடைசியா இதுதான் வாழ்க்கையினு இருந்த அந்த ஆல்ஹகாலையும், விடமுடியாம விட்டவன் சாராயத்த குடிக்காதடானு சொல்லுறதுக்கும் வித்தியாசம் இருக்கா...?"

இதுல நான் இரண்டாவது ரகமுங்க...,

எனக்கு அந்தத் தகுதி இருக்கும்னு நம்புறேன்...!!!

❖❖❖



நாம் வாழ்வோமா...?

தினமும் காலையில எழுந்து, பஸ்டாண்ட பெருக்கி சுத்தம் செய்யுறதொரு அம்மாவுக்கு, தன்னோட கையில இருக்குற தொடப்பக்கட்டை இவ்வளவு அழகா பெருக்கி சுத்தம் செய்யுது..., ஆனால், நாட்கள் ஆக ஆகத் தொடப்பக் கட்டை கொஞ்சம் கொஞ்சமா தேய்ஞ்சு தோகையெல்லாம் மறைஞ்சு சில நாளுலேயே வெறும் கட்டைபோல மாறிடுதே எதுக்காக...? அசிங்கத்தை அகற்ற தன்னோட உடம்பையே இந்தத் தொடப்பக்கட்டை என்னத்துக்காகத் தேய்ச்சிக்குது?னு ஒரு கேள்வி எழுந்துச்சி.

தெருவோரத்துல நாலு பசங்க முட்டுக்கூடி பேசிக்கிட்டு இருந்தாங்க.அவுங்க அப்படி என்னதான் பேசிக்கிறாங்கனு பார்த்தபோது, அதுல ஒருத்தன் நேத்து செம தண்ணி மாமு..., ஃபுள்ளா அடிச்சி மட்டையா ஆயிட்டேன்னான். இன்னொருத்தன் நேத்து நான் என்னோட கேர்ள் ஃப்ரண்டு கூடத் தியேட்டருக்கு போயி கடைசிக் கார்னர் சீட்டுல உட்கார்ந்து படம் பார்த்தோம்டானான். உடனே

மூனாவதானவன் இடையில பூந்து நீ படம் பாத்துருப்பியா...? (இல்ல) படம் ஓட்டிருப்பியானு எங்களுக்குத் தெரியும்டானு கிண்டலடிச்சான். இவங்க இப்படிப் பேசிக்கிட்டு இருக்கும்போது, டைட்டான டீஷர்ட்டும், ஜீன்ஸ் பேண்டும் போட்டுகிட்டு ஒரழகான பொண்ணு அவங்கள கடந்து போனாள். அவள பாத்துக்கிட்டே அந்த நாலு பேருல கடைசியானவன், ஐயோ..., இவள பெத்தாங்களா...? இல்ல செதுக்குனாங்களா...? பின்னழகும், முன்னழகும் போட்டி போட்டுக்குட்டு வளர்ந்து நிக்குதே...! இவள போல ஒருத்தி கெடைச்சா எப்படி இருக்கும்...?னு தனக்குத்தானே கேள்வி கேட்டுக்கிட்டான்.

ரேஷன் கட வரிசையில நின்னுக்கிட்டு இருந்த ஒரு பாப்பா..., பக்கத்துல இருக்குற ஒரு பெரியவர கூப்பிட்டு, தாத்தா..., அரிசி மூட்டை கட்டுற சணல எடுத்துட்டு வர மறந்துட்டேன். உங்களுட்ட ஒரு சணலு மிச்சமா இருக்குமா..? னு கேள்வி கேட்டாள்.

வயக்காட்டுல மாடு மேய்ச்சிகிட்டு இருந்த ஒருத்தரு, தன் மாட்டோட கன்னுக்குட்டி காணாம போனதனால எங்க எங்கயோ தேட ஆரம்பிச்சாரு. நான் வளர்த்த என் கன்னுக்குட்டி காணாமே போயிடுச்சே..., நான் எங்கப்போயி தேடுவேன்...? எப்படிக் கண்டுப்பிடிப்பேனு பொலம்பிக்கிட்டே அலைஞ்சபோது ஒரு கருவேல மரத்தடியில, களிமண் வரப்பு, வறட்சியில வெடிச்சிப்போயிருந்த பிளவுல, அதனோட காலு மாட்டிக்கிட்டு வெளியே எடுக்க முடியாம, 'அம்மா...' 'அம்மா...'னு கத்திக்கிட்டு இருந்துது. இதப்பார்த்ததும், அவரு நிம்மதி பெருமூச்சு விட்டு, அடக்க முடியாத சந்தோஷத்துல நீ இங்கதான் இருக்கியா...?னு அந்தக் கன்னுக்குட்டிய பாத்து நிம்மதியான ஒரு கேள்வி கேட்டாரு.

புளிய மரத்து மேல ஒரு சின்னப் பையன் ஏறி, கீழ நிக்கிற அவளோட தங்கச்சிக்கிட்ட ஒனக்கு ஒத்தச்சோட்டான் புளி

வேணுமா...? இல்ல அஞ்சு சோட்டான் புளி வேணுமா?னு, பாசமான ஒரு கேள்வி கேட்டான்.

எங்க வீட்டுக்கு ஓட்டு கேட்க வந்த வேட்பாளருட்ட, உங்களுக்கு நாங்க ஓட்டு போட்டா..., நீங்க எங்க மக்களுக்கு என்ன செய்வீங்க...?னு என்னோட அப்பா ஒரு கேள்வி கேட்டாரு.

இப்படி.., எத்தனையோ கேள்விகள, ஒவ்வொரு நாளும் பல விதத்துல, பல பேருட்ட கேட்குறோம்.

அப்படியே, நானும் சிலகேள்விகளைக் கேட்குறேன்...,
எந்தன் பிறப்பைகூறும்
என் பெற்றோர்களின் பிறப்பை தெளிவுபடுத்தும்
தாத்தனின் முப் பிறப்பிற்கு
முந்தைய பிறப்பை
என்னால் கூற முடியுமா...?

இரு தலைமுறைகளுக்கு
முந்தைய வரலாற்றையே கூற முடியாதவனால்
2121212121.21(700கோடி) தலைமுறைகளுக்கும்
முன்னோடிய காலத்தைக்
குரங்காகிய என்னால் எப்படி வரையறுக்க இயலும்...?

யான் குரங்கே என்றிருப்பின்
எளிதில் கூறியிருப்பேன்
இன்றோ, நான் பரிணாம வளர்வால்
மனிதன் ஆயிற்றேனே...! எப்படி உரைப்பேன்...?
இருந்தும் இயன்றவற்றை இயம்புகிறேன்.....

அகிலத்தின் ஆதி உயிர் 'அமீபா'-வில்
தோன்றிய இரு கால்களில், சென்ற 10 விரல்களை
இயக்கும் நரம்பு தொகுப்பின், இயக்கமான மூளையில்
கேள்விகள் எழுந்தால் அதன் பெயர்...
'மனிதன்'....

அணுவையும் துளைத்தெடுக்கும்
இவனின் மூளைச் செல்கள்
கேட்ட முக்கியக் கேள்வியில் ஒன்று,
உலகம் தோன்றியது எப்படி...?
வினாக்கள் தோன்றிய மாத்திரத்தில் விடை கொடுத்தவன்
முதன்முதலில் வினாவையே தவறாகத் தேர்ந்தெடுத்தான்.....
அதாவது,
உலகம் தோன்றி எத்தனை வருடங்கள் ஆயிற்று...? என்று
ஏன் இந்த வினா தவறானது....????

காரணம்...!
வருடங்கள் கணக்கிடப்படுவது
புவியின் சுழற்சியால் என்றால்
புவியே உருவாகாத காலத்தையும் புவியின் சுழற்சியால்
கணக்கிடுவது எப்படிச் சரியாகும்...?

தாக்கிய கேள்வி தவறாயினும்
நோக்கிய கோணம் தமதானால்
தவறேதும் இல்லையே...!
அதனால்,
சிந்தனையாளர்களின் சிந்தனைகள்
என் செவிப்பறையில்
விழுந்ததில் சிறுதுளியினைத் தருகிறேன்....

1000 டன் எடையை ஒரு
தேக்கரண்டியில்
அடக்கி அதனைச் சிதறச் செய்தால்
எப்படி இருக்கும்...?
அதினும் தேக்கரண்டியின் அளவை
தேகத்தால் கணக்கிட
முடியாஅளவீட்டில் மதிப்பிட்டால்
அதன் அமுக்கம் எப்படி இருக்கும்...?

ஒரு கோணத்தில் சொன்னால்....,

இன்றைய
பிரபஞ்ச பொருட்கள் யாவும்
இணைந்த கற்றையால்
ஒரு பெரிய மெத்தையாய் நின்று
அளவிட முடியா வெப்பத்தில் சிதறுண்டு
பின் கனலின் தாகம் குறைந்த வேளையிலே----------
வாயுநிலை பொருள்கள் யாவும் கலக்க
ஒன்றோடொன்று ஈர்க்க
பின் முகில்களாகத் திரிந்து
நட்சத்திரங்களாகவும், கிரகங்களாகவும் உருப்பெற்றன.

அதன் தொடர்வினையின்,
பரிணாம வளர்ச்சியினாலே
ஏன்? எப்படி? எதற்கு? எங்கே?
என்று, யூகிக்கும் திறன் கொண்டான் மனிதன் இன்று.

பெரும் பிண்டம் வெடித்து
பின் அண்டங்கள் விரிவடைகின்றன என்றால்
வெடித்துச் சிதறும் முன்னரான அதன் தொடக்கம் எங்கே..?
அவ்வழியே ஏற்பட்ட
'டமார்' சத்தத்திற்கு முந்தைய காலத்தில்
விண்வெளியின் முதல்நிலை - வெற்றிடமா...?

என்று தோன்றின சூரியனும் பூமியும்...?
நிலம், நீர், காற்று, வானம், நெருப்பு
இவைகளைத் தந்தது யார்..?
அமீபாவின் ஆரம்பக் கட்டம் எது..?
உடல் உயிரை தாங்குவது எப்படி...?
குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான்
என்றால்
குரங்குகள் இன்றும் குரங்குகளாகவே இருப்பதேன்....?
இன்றுள்ள உயிர்களில் தொன்மையானது எது...?

முதலில் தோன்றிய மனிதனின் இடம் எது...?
அவன் எங்குத் தங்கியிருப்பான்...?
என்ன உண்டிருப்பான்..?
நாம் உண்ண வேண்டும்
அதற்கு, பசிக்க வேண்டும். இது யார் வகுத்த நியதி...?

முதலில் தோன்றியது ஆணா, பெண்ணா...?
பெண்தான் என்றால் முதல் குழந்தை எப்படிப் பிறந்தது....?
ஹோமொசெப்பியன்
என்றால்
ஆண் பால், பெண் பால் இனக் கவர்ச்சி ஏன்..?

மனிதன் புவியெங்கும் ஏன் பரவினான்....?
கப்பல் இல்லா காலத்தில்
கண்டம் விட்டுக் கண்டம் எப்படிச் சாத்தியம்....?
இன்றைய கடல்கள் மலைகளாயிருந்தன,
மலைகள் கடல்களாயிருந்தன என்றால்
ஏன் இந்த மாற்றம் வரவேண்டும்....?
இன்றைய இமயமலை
இருந்த இடத்தில் அதற்கு முன்னர் என்ன இருந்திருக்கும்...?

மனிதன் பேசிய முதல் வார்த்தை என்ன...?
அவன் எண்ணிய முதல் எண்ணம் என்ன..?
நாடோடியாகத் திரிந்தவன்,
ஓரிடத்தில் தங்க நினைத்ததேன்..?
'சிக்கிமுக்கி'
இல்லாமல் இருந்திருந்தால் நெருப்பு எப்படிக் கிடைத்திருக்கும்..?
'சக்கரம்' இல்லாமல் இன்று சாலைகள் இருந்திருக்குமா..?
விவசாயம் எப்படித் தோன்றியிருக்கும்...?
நாகரிகம் தோன்றியது எப்படி...?

முதல் சட்டம் யாரால் இயற்றப்பட்டது...?
கல்வி என்ற ஒன்றை கண்டுபிடித்தது யார்....?
பணம் யாரால் படைக்கப்பட்டது....?

பழமொழிகள்
முதன் முதலில் எப்படி உருவாயிருக்கும்...?
முதல் காப்பியம் என்ன? அதன் கதை என்ன...?
'கடவுளர்கள்' எவ்வாறு இருந்திருப்பார்கள்...?
100 என்பது முழுமை என்றால்,
நேரம் 60-ன் அடுக்குகளாகவும்
டிகிரி 360 எனவும் இருப்பது எப்படி...?

இந்தியாவில் நாகரிகம் எப்போது தோன்றியிருக்கும்...?
அது பாபிலோனிய, எகிப்திய, ஐரோப்பிய
நாகரிகங்களுக்கு இணையாக இருந்திருக்குமா...?

எகிப்தின் கிடுகிடு வளர்ச்சி எப்போது...?
அப்போது ஆண்ட மன்னர் யார்...?
மூட/கடவுள் நம்பிக்கைகள் அதிகம் இருந்த
அந்தக் காலகட்டத்தில்
மன்னர் எப்படிச் சமாளித்திருப்பார்...?
எகிப்தியர் மம்மி செய்தது ஏன்? எப்படி...?

உலகம் தோன்றியதிலிருந்து, கிறிஸ்து பிறப்பதற்கு முன்வரை
நடந்தவற்றின் ஒரு சிறிய தொகுப்பே, கி.மு. - கி.பி
இந்தக் கணக்கீட்டை எல்லாம் கொடுத்தவர் யார்...?

இவை யாவுக்கும் தீர்வு கொடுக்கப்போகிறவர்
நம்முள் யார்.....???

இப்படியாக..., நான் கேட்கும் மொத்த கேள்விகளும் "நான் யார்...?" என்ற ஒத்த கேள்வியில் ஒடுங்கிவிடுகின்றன. அப்படியானால், "நான் யார்" என்ற கேள்விக்குப் பதில் கொடுக்க நம்முள் யாருக்குச் சாமர்த்தியம் இருக்கிறது...????

என்னடா..., சம்பந்தமே இல்லாம ஏதோ உளறுறேனு பாக்குறீங்களா...???

ஆமாங்க... நாம் யாருனு தெரிஞ்சிக்க ஆசப்படாத வங்களுக்கும் இந்தக் கேள்விகளுக்கும் எந்தவித தொடர்பும் இல்ல.

ஆனால், தொடர்புடைய கேள்வி ஒன்னு இருக்கு...,

எப்படியும் சாகப் போறவங்கதானே நாம, பிறகு எதுக்கு நாம சாப்பிடணும்...?, மிடுக்கா உடுப்பு உடுத்திக்கணும்...?, பெரியபெரிய வீடெல்லாம் கட்டணும்...?, கல்யாணம் பண்ணணும்...?, புள்ளகுட்டி பெத்துக்கணும்...? பிறகு, அவங்களுக்காக நிறையச் சொத்துகள் சேர்க்க படாத பாடு படனும்...?

.....

.....

உங்களுக்கு விடை தெரியாதுனு எனக்குத் தெரியும். உண்மைய சொல்லப்போனா, இதற்கான உள்ளார்ந்த காரணத்த கண்டுபிடிச்ச, கண்டுபிடிக்குற, கண்டுபிடிக்கப் போற யாரையுமே நாம இன்னும் கண்டுப்பிடிக்கல.

இந்தக் கேள்வியவே, மேலோட்டமா என்ன பார்த்து கேட்டீங்கனா,

"நாம வாழணும் சார்..." அதுக்காகத்தான் இந்தக் கல்யாணம், பொண்டாட்டி, புள்ளகுட்டிலாம்னு சொல்லு வேன்.

திரும்பவும் "ஏன் வாழணும்...???"னு கேட்டீங்கனா...,

சத்தியமா எனக்குப் பதில் தெரியாதுங்க.

எனக்கு மட்டுமில்லங்க, இந்த உலகத்துல வசிக்குற யாருக்குமே நாம ஏன் வாழணும்னு தெரியாதுங்க. சரி, இந்தக் கதைய விட்டுட்டு நம்ம கதைக்கு வருவோம்.

எங்கோ உதித்து, ஏதோ சேர்ந்து, என்னமோ பிளந்து, அது வளர்ந்து, இது பெயர்ந்து, ஒன்று கடித்து, மற்றொன்று வெடித்து, இருந்ததால் உண்டு, இல்லாததால் துவண்டு, தட்டுத் தடுமாறி, தப்பித்தவறி முளைத்து வந்த, 'மனிதன்' என்ற ஜீவராசி, இன்று எதில் வந்து நிற்கின்றான்...??

"நாம வாழணும்..." என்று நான் சொல்லுகின்ற இந்தப் பதிலிலா...???

அப்படினா, எத்தன முதலாளிகள், எத்தன தொழிலதிபர்கள், எத்தன வியாபாரிகள், எத்தன ஜமீன்தரர்கள், எத்தன பணக்காரங்க, முக்கியமா எத்தன அரசியல்வாதிகள், ஏன்...? நம்மள்ல எத்தன பேர் இப்படி "நாம வாழணும்"னு நினைக்கிறோம்...???

அப்போ இன்றைய உலகில் இந்தக் கேள்விக்கான பதில்,

"'ம'கரத்தை திரித்து 'ன'கரமாக்கி
வாழ்வோம்
நான் என்ற வார்த்தையில்"

கிடைப்பதெல்லாம் தனக்கு மட்டும்தான், இருப்பதெல்லாம் எனக்கு மட்டும்தான் என்று வாரி வாரி வாயில் அடித்துக்கொண்டு, வாழ்க்கையை முடித்துக்கொண்டு, "நான் வாழணும்" என்ற சுயநலக்கிருமியால் தன்னையே அழித்துக் கொண்டு, தன் பாடையைத் தானே கட்டி, அதில் தானே சென்று படுத்து, தனக்கான கல்லறையையும் தானே வெட்டி, அதிலும் தானே குதித்துத் தனக்குத்தானே மண்ணை வாரி மூடிக்கொள்ளும், 'பொதுநலம்' மறந்த மனித விலங்குகள், இறுதியில் காணும் பலன்தான் என்ன...?

திறமை இருக்கிறவங்க வாழ்க்கையில முன்னேறி நல்ல நிலையில இருக்காங்க, திறமை இல்லாதவங்க நாறிப் போய்க் கஷ்டப்படுறாங்க. இதுக்கு ஏன் ராமா... எல்லாப் பணக்காரங்களையும் பார்த்துக் கையாலாகாதவங்களுக்குத் தலை தூக்குற 'பொறாமை' உங்களுக்கும் வெளியே எட்டிப் பாக்குதுங்குறீங்களா...???

பொறாமைதாங்க...

ஆனால், பணக்காரங்க மேலயோ, முதலாளிகள், எஜமான்கள், தொழிலதிபர்கள், அரசியல்வாதிகள் மேலயோ இல்லீங்க.

"அடிமை விலங்குகள் அகன்றன இனிமேல்
கொடுமை பிறர்பால்கூறுதற்கில்லை
திடமுடன் சத்தியதீயினைமூட்டி
மடமை, மதவெறி, மமதையை எரித்து
பொய்யும் மோசமும் புலையும்பொசுங்க
வையம் முழுவதும் வாழ்ந்திட துணிந்திடலாம்"-னு

கண்ணுல கோடிக்கணக்கான கனவுகளோடு பிறக்குற எல்லாக் குழந்தைகளுக்கும் நல்ல வாழ்க்கை கிடைக்கிறது இல்லையே ஏன்...???

தான் காணும் கனவுகள் மெய்யாகுமானு விழிக்க ஆரம்பிக்கிறதுக்கு முன்னே அவர்களோட கண்கள் பிடுங்கப்படுகின்றனவே ஏன்...???

தொப்புள் கொடிகள் அறுக்கப்படுவதற்கு முன்னே அவர்களோட உமிழ்நீர்க் கலங்கள் எரிக்கப்படுகின்றனவே ஏன்...???

இந்த 'ஏன்...?' என்ற இரண்டெழுத்து கொடுக்குற "காரணங்களின் சக்தி" மேலதாங்க என் 'பொறாமை' மொத்தமும் அடங்கியிருக்கு. பொறாமை மட்டுமில்லீங்க. அந்தக் காரணங்களுக்காகச் சாபமும் விடுறேன்... "சதி" இப்பொழுதும் இருக்கணும்னு...

என்ன ராமா... சதி, ரதினுலாம் சொல்லி சிரிப்ப கிளப்புறீங்க... சரி, சதினா என்ன...??? அந்த **"சதி இப்பொழுது இருந்திருந்தால் என்ன"** ஆகும்...???

❖❖❖



சதியா...?

1

இரவு பெய்த மழையில் மொட்டிதழின் விட்டத்தில் ஒட்டியிருந்த நீர்த்துளி விலகி, தன்னுள் இறுக்கியிருந்த இரவின் வலிமையைக் குறுக்கக் கூவிய சேவலின் குரலால், காக்கையும் விழித்துக் கரைய, மறைத்திருந்த மேகக்கூட்டங்கள் சுடர்விடும் சூரியனால் திசைமாறி செல்ல, மணம் கமழும் மதுரை மல்லிகள் மக்களைக் கவர்ந்த வேளையிலே...,

எலே ராமா..., ராமா...!!! எழுந்துரிச்சி தொலடா...,

இந்தா..., சுண்டலு, சக்கரசாதம், பொரி, கொய்யாப்பழம் எல்லாம் இருக்கு...! சீக்கிரமா இதுவெல்லாத்தையும் தின்னுட்டு ரெடியா ஆவுடா... இன்னைக்கு விநாயகர் சதுர்த்திடா, அதனால கோவிலுக்குப் போகணும்னு சொல்லி என் பாசக்கார நண்பன் 'பிரபாகரன்' என்ன தூக்கத்துலேருந்து எழுப்பினான்.